தேனி வடக்கு மாவட்டம் மார்க்கையன்கோட்டை, பேரூர் பகுதியில் தமிழக முன்னாள் முதல்வர், போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி நமது மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் ஓ.பன்னீர்செல்வம் திறந்தவேனில் பொதுமக்களை சந்தித்து வாக்கு சேகரித்தார். உடன் மார்க்கையன்கோட்டை பேரூர் செயலாளர் முருகன் மற்றும் கழக முன்னோடிகள் இருந்தனர்

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் பள்ளத்தூரில் வாக்கு சேகரித்தபோது முஸ்லிம் ஜமாத் சார்பில் அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பனுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. உடன் பொதுக் குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ். ரவி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மதுரை மாவட்டம் திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் குடும்பத்தோடு தொகுதிக்குட்பட்ட பேரையூர், கல்லுப்பட்டி பகுதிகளில் வீதி வீதியாக சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் பாரதி மணிமாறன், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

தென்காசி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர்.கலை கதிரவன் அவரது சொந்த ஊரான சுப்பையாபுரத்தில் தெரு தெருவாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.பெண்கள் ஆரத்தி எடுத்து மலர் தூவி அவரை வரவேற்றனர்.உடன் அவரது துணைவியார்,மாநில விவசாய அணி இணைச் செயலாளர் அப்துல்காதர், சுரண்டை நகர பொறுப்பாளர் கணேசன்,உள்பட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர், அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு காயல்பட்டினம் தைக்காதெருவில் வைத்து, நகர விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் பெருந்திரள் உற்சாகமாக வரவேற்று வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு பிரச்சாரம் செய்தனர்.நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பில்லா ஜெகன், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர், விசிக தொழிலாளர் விடுதலை முன்னணி நகர பொறுப்பாளர்களான மங்கை பெருமாள், சாரதி, சுரேஷ், தேங்காய் பண்டகசாலை, மற்றும் கூட்டணி கட்சி கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

சிவகாசி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி காங்கிரஸ் வேட்பாளர் அசோகன் அவர்களை ஆதரித்து சிவகாசி நகரப் பகுதிகளில் மாநகராட்சி மாநகரச் செயலாளர் உதயசூரியன் தலைமையில் மக்களை நேரில் சந்தித்து வாக்குகள் சேகரித்தார். உடன் சிவகாசி மேயர் சங்கீதா இன்பம் இருந்தார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம்செஞ்சியில் பா.ம.க., தா.வெ.க. ஆகிய கட்சியிலிருந்து விலகி 150க்கும்மேற்பட்டோர் செஞ்சி தொகுதி தி.மு.க . வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் உன்னிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பனை ஆதரித்து மாநிலம் தழுவும் மாற்றுத்திறனாளிகள் சங்கமாநில தலைவர் புஷ்பராஸ் தலைமையில் நிர்வாகிகள் கிராம கிராமமாக சென்று தீவிரவாக்கு சேகரித்தனர்.

திண்டிவனம் (தனி) தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வி.சி.க. வேட்பாளர் வன்னி அரசுக்கு பானை சின்னத்திற்கு திண்டிவனம் நகரம், 14 வது வார்டில் கிளைச் செயலாளர் கே.ராஜேந்திரன் தலைமையில் முன்னாள் மாவட்டப் பிரதிநிதி ந.ப.மனோகரன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.எல்.பி.கோபிநாத், என்.ராஜசேகரன், மேஸ்திரி என்.ராஜேந்திரன், ஆர்.சலீம் கான், எம்.தஸ்தஜிர், எம்.டேவிட் ராஜன், டி.ஹரிதாஸ், கே.சரவணன், எம்.அபி, கோவிந்தாபுரம் சீதாராமன், பூதேரி எஸ்.பாஸ்கர், பி.கமலக்கண்ணன், காமராஜ், டேவிட் ராஜ், நடராஜன், இதயதுல்லா, ஆர்.விவேகானந்தன், தங்கவேல், சாரம் தயாளன், வி.அருணாச்சலம் மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர்.